2001 செப்டம்பர் 11]

(அ) மற்றும் (ஆ) 1996-லிருந்து 2001-ஆம் ஆண்டு வரை அரசின் நிர்வாகச் சீர்குலைப்பால் ஏற்பட்ட வருவாய் இழப்பு நிகழ்வுகள் குறித்த வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நீதிமன்றம் இல்லையென்று சொன்னால், தற்போது சிறப்பு நீதிபதிகளைக்கொண்டு, கடந்த கால முறைகேடுகளைப் பற்றி விசாரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எத்தகைய சீர்கேடுகள், முறைகேடுகளாக இருந்தாலும், அந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் மூலமாகவே அவற்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கல்குவாரித் தொழிலாளர்கள் புதிய சட்ட திட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் கல்குவாரிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் புதிய சட்ட-திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜி. பழனிசாமி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. டி. சுதர்சனம், திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இந்தக் கல்குவாரிகள் குறித்து ஒரு புதிய rules and regulations-ஐக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினால், சுமார் 50 இலட்சம் கல்குவாரித் தொழிலாளர்கள் இப்போது தங்களுடைய வேலைகளை இழந்து, பசியும் பட்டினியுமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. முன்பு, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே, கல்குவாரிகளை யாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கிறோமோ, அவர்கள் அந்த இடத்தில் ரூ.25 இலட்சம், 50 இலட்சம் அல்லது 1.00 கோடி ரூபாய் என்று பணத்தை முதலீடு செய்து, கல்குவாரிகளுக்கு ஒரு infrastructure-ஐ அவர்கள் create செய்கிறார்கள். அப்படி அவர்கள் அடிப்படை வசதிகளை அங்கே பெருக்கி, அங்கே கல்குவாரித் தொழிற்சாலைகளையெல்லாம் அமைத்தபிறகு, அந்தக் குத்தகைக் காலம் முடிந்தவுடன், மீண்டும் அதை வேறு சில நபர்களுக்கு நாம் குத்தகைக்கு விடுகிற காரணத்தினாலே, பணத்தை முதலீடு செய்து முன்பு இருந்தவர்கள் அப்படியே அந்தக் கல்குவாரிகளை நட்டாற்றில் விட வேண்டிய ஒரு நிலை வந்து இருக்கிறது. ஆகவே, பழைய குத்தகை எடுத்தவர்களுக்கே மீண்டும் கல்குவாரிகளைக் குத்தகைக்குக் கொடுப்போம் என்று சொன்னால், நிச்சயமாக 50 இலட்சம் தொழிலாளர்களுக்கு, இப்போது வேலையிழந்து வாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய ஒரு சூழல் உருவாகும். ஆகவே, நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த கல்குவாரியில் இன்று வேலையிழந்து வாடிக்கொண்டிருக்கிற 50 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையில் மீண்டும் இந்தக் குத்தகை conditions-ஐ மாற்றியமைத்து பழைய குத்தகை யார் எடுத்தார்களோ அவர்களுக்கே மீண்டும் குத்தகை renewal செய்துகொள்வதற்கு அரசு அனுமதிக்குமா, வேலைவாய்ப்பை உருவாக்கித் தருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்குவாரியினுடைய உரிமத்தை வழங்குகின்ற ஒரு சூழ்நிலையில் கடந்த 4 ஆண்டு காலமாக நம்முடைய அதிகாரிகள் மட்டத்திலும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் மட்டத்திலும் பல்வேறு மனுக்கள் கொடுத்தும் அதற்குத் தீர்வு ஏற்படாமல், இன்றையதினம் அது ஒரு

தீர்மான வடிவத்திலே இந்த அரசினுடைய கவனத்திற்கு வருகின்றது. சுமார் ஒரு இலட்சத்திற்கு அதிகமான கல்குவாரிகளில்—அதற்கு மேலேயும் இருக்கும்; அதாவது நம்முடைய சென்னை மாநகரினுடைய பகுதிக்கு அருகிலிருந்து, களியக்காவிளை வரையிலே உள்ள கல் குவாரிகளிலே—இந்த மக்கள் பணியாற்றுகின்றார்கள். அதற்கு மேலே, லாரிகளில் ஆயிரக்கணக்கானோர் அந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள். மேலும், அரசினுடைய தேவைக்கு — பெரிய கல்லையும், அதுபோல், 1½ இஞ்ச் ¾ இஞ்ச், ½ இஞ்ச் மெட்டல், என்று அரசினுடைய தேவைக்கும் நாம் இவர்களிடமிருந்துதான் பெறுகின்றோம். ஆனால், சுற்றுச்சூழல் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, கடந்த காலத்திலே இது வழங்கப்படாமல், அதனுடைய பல்வேறு துறைகளில், அதாவது, 50 மீட்டர் என்று இருந்ததை 500 மீட்டர் என்று அதனுடைய இடைவெளியை உயர்த்தியது ஒரு பக்கத்திலே; சாதாரணமாக ஒரு இடத்திலே போய், அதனுடைய மண்ணை, மேல் மட்டத்திலே இருக்கிற மண்ணை, 20 அடி ஆழத்திற்கு எடுத்ததற்குப் பின்னால்தான், அந்தக் கல்லை கண்டுபிடித்து, அதைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே, இதிலே இருக்கக்கூடிய அந்த விதிமுறைகளை ஓரளவிற்குத் தளர்த்தி, அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு, 10 ஆண்டு காலத்திற்கு நாம் அதைக் கொடுப்போமேயானால், அரசாங்கத்திற்கு ஒரு பக்கத்திலே வருமானம் வருவதற்கும், இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே நம்முடைய கதர் கிராம வாரியம்—மத்திய அரசினுடைய துறை—ஏற்கெனவே மானியம்கூட அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று ஒரு காலகட்டத்திலே சொல்லியுங்கூட, நம்முடைய முன்னாள் மாநில அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆகவே, அந்த வகையில், இந்தப் பிரச்சினைக்கு அரசு ஒரு சரியான கொள்கையை வகுத்து, நமது தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தீர்வுகாண வேண்டும். இதிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று, மேல்மட்டத்திலே இருக்கின்ற பாறைகளை உடைத்து எடுக்கின்றோம்; மற்றொன்று, மண்ணிற்குள்ளே இருக்கிறது. எனவேதான், இது ஒரு முக்கியமான பிரச்சினை, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன்படுகிற அளவிலே, அந்தச் சட்ட திட்டங்களிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, 10 ஆண்டு காலம் குத்தகைக்குக் கொடுக்கிறபோது, ஒரு வருடத்திற்கு இவ்வளவு காசு நம்முடைய அரசாங்கத்திற்கு வர வேண்டும் என்பதிலே, அதிகம் பணத்தை வசூல் பண்ணாமல், ஒரு தொழில் என்ற அடிப்படையிலே, இந்த கல்குவாரியினுடைய பிரச்சினைக்கு அரசு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துமா என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96ஆம் ஆண்டு நமது அரசு முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கல்குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், 1996-க்குப் பின்னால் ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து, அந்தக் கல்குவாரியை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பின்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டி.மணி அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, பல இலட்சம் தொழிலாளர்கள், கல்குவாரியிலே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் வேலை இழந்ததோடு மட்டுமல்லாமல், இந்தக் கல்குவாரிக்கு அனுமதி பெற்றவர்கள், எந்தெந்த இடம் என்று அரசால் சர்வே செய்யப்பட்டதோ அந்த இடத்திலே லாரிகள் செல்வதற்கான சாலை போட்டு, குடியிருப்புகள் கட்டி, அங்கே இயந்திரங்கள் பொருத்தி இப்படிப் பல இலட்சக்கனக்கான ரூபாயை, குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாயை, முதலீடுகளைப் போட்ட பின், 10 ஆண்டுகாலமாக அவர்கள் நிர்கதியாக நிற்கக்கூடிய பரிதாபகரமான நிலைமை இன்றையதினம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு எந்தத் தடையும் இல்லாத வகையிலே, அவர்களுக்காக அரசு நிர்ணயிக்கின்ற இடத்தில் அவர்களுக்கு அனுமதி கொடுத்தால், அவர்கள் மீண்டும் தங்களுடைய தொழிலைத் தொடங்குவதற்கும், அதை நம்பி இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா, அதைச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் ...வர் அவர்களே, அரசு நிலங்களிலுள்ள கல்குவாரிகள் 1959ஆம் ...டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி, விதி 8-இன்படி ...ப்பந்தப்புள்ளி இணைந்த பொது ஏலம் வாயிலாகக் குத்தகைக்கு ...டப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க அரசாணை எண் 286, தொழில் ...றை, நாள் 1-4-1999-இன்படி தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 36-...இல் குடியிருப்புகளுக்கு 500 மீட்டர் சுற்றளவில் யாதொரு கல்குவாரி நடவடிக்கைகளுக்கும் அனுமதித்தல் கூடாது என்ற விதி சேர்க்கப்பட்டு

2001 செப்டம்பர் 11] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

நடைமுறையில் உள்ளது. இதன்மீது அரசு ஒரு சிறப்புக் குழு அமைத்து 500 மீட்டர் என்ற விதியைத் தளர்த்துவது குறித்த கருத்தை ஆய்வு செய்ய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசாணை எண் 44, திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித் துறை, 2-4-1990இன்படி 43 வட்டங்களில் சுரங்கப் பணிகள் மற்றும் சிறு கனிமம் தோண்டுவதற்கான நடைமுறைகளில் ஒன்றாக, மலைப்பகுதி மேம்பாட்டுப் பாதுகாப்பு குழுமத்தின் அதாவது Hill Area Conservation Authority-யின் அனுமதி பெற வேண்டும். இவ்வகைப்பட்ட பகுதிகளில் மலைப்பகுதி கிராமங்கள் மட்டும் தனியாக இனம் காணப்பட்டு, சமதளப் பகுதிகளிலுள்ள அரசு மற்றும் தனியார் நிலங்களிலுள்ள கல்குவாரிகளைக் குத்தகை விடுகின்ற வகையில் மேற்சொன்ன அரசாணையில் சில திருத்தங்களைக் கொண்டுவர இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டு காரணங்களினால், கல்குவாரிகள் ஏலம் தற்போது சிறிது தாமதமாகுமே தவிர, தொழிலாளர்களுக்கு இதனால் எந்தவித வேலைவாய்ப்பு பாதிப்பும் ஏற்பட வழியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனை இரத்த வங்கி செயல்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் இருப்பது குறித்து கவன ஈர்ப்பாக திரு. கா. கந்தசாமி அவர்கள் அறிவிப்புக் கொடுத்து உள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். தீர்மானத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் அரசினர் மருத்துவமனையில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழே இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்படாமல் [illegible] விபத்து ஏற்படும் சமயங்க [illegible]